සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌන උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/IA/10/IA/CC/Gen
ඔබේ අංකය / உமது இல / Your No: ........
දිනය / திகதி / Date: 2021.04.19

அனைத்து மேலதிகப்பணிப்பாளர்கள்/மாவட்டச்செயலாளர்கள்,

அனைத்து மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்கள்,

பிரதேசசெயலாளர்கள்................................,

சமுர்த்தி முகாமையாளர்கள்-சமுர்த்தி வங்கிச்சங்கம்......................

**பிரதேச கணக்காய்வு அலகு(Audit Units) தாபித்தல் மற்றும் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கடமைக்கு இணைத்தல்**

2013 முதலாம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின்(2017 இரண்டாம் இலக்க திருத்தப்பட்ட 5(ஊ) அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதற்காக நிதிப்பிரமாணம் 133,134,2018 இன் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40வது அத்தியாயம் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் முறையான ஆலோசனைக்கமைய தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக்கணக்காய்வு பிரிவு இந்த திணைக்களத்தினுள் சுயாதீனமான ஒரு பிரிவாக பிரதான உள்ளகக்கணக்காய்வாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

02. சமுர்த்தி அபிவிருத்தித்திணைக்களம் தாபிக்கப்பட்டதன் நோக்கமான பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை அதிகரிக்கச்செய்தல்,வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக சமனிலையை உறுதிப்படுத்தும் தேசிய கொள்கையினை வலுப்பெறச்செய்வதற்காக குறித்த சட்ட யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அதிகாரங்களுக்கமைய அதிகம் பொறுப்பு வாய்ந்த கடமைப்பொறுப்புக்கள் இந்த திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முறையாக உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதும் உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புக்கள் பரவலாக்கப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொண்டு நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்தலினை நோக்காகக் கொண்டு பிரதேச கணக்காய்வு அலகு தாபிக்கப்படுவதற்கு திணைக்களத்தினால் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது மாவட்ட செயலகத்தினுள் சுயாதீன பிரிவாக தாபிக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் உள்ளகக்கணக்காய்வு பிரிவு தொடர்ந்தும் பிரதேச மட்டத்தில் சுயாதீன அலகாக பரவலாக்கப்படுகின்றது.

03. பிரதேசசெயலகப்பிரிவு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பல ஒன்றிணைக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வு அலகினை(Audit Units) உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு – 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிச்சங்கக் காரியாலயங்களில் கணக்காய்வு அலகு தாபிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த காரியாலயத்திற்கு தேவையான பௌதீக வசதிகள் கட்டம் கட்டமாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



Tel- / Fax - / E-mail-

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
011-2871672/2872202
011-2889002
dg@samurdhi.gov.lk

අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment)
011-2873799
011-2873996
diradmin@samurdhi.gov.lk
**Hot Line :0112-889007**

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@samurdhi.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
**Hot Line:0112-885582**

කාර්යාලය / அலுவலகம் / Office
0112872202
**Hot Line: 011- 2887722**

04.உத்தியோகத்தர்களை நியமித்தல்

பட்டதாரிகள் நியமன செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்வாங்கப்பட்டு நிரந்தர நியமனம் பெற்று இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குழுவினர் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அலகுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் உள்ளகக்கணக்காய்வு பிரிவில் தற்போது சேவை செய்யும் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரினை அந்த அலகுக்கு நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய கணக்காய்வு அலகுக்கான அனைத்து காரியாலயங்கள்,சமுர்த்தி வங்கி,வங்கிச்சங்கம்,மக்கள் கட்டமைப்பு,பிரதேச அமைப்புக்களின் கணக்காய்வு கடமைகள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு முறையாக ஒப்படைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

05. உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகள்

கணக்காய்வு அலகுக்கு உள்வாங்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் வரவு,விடுமுறை,வெளிக்கள பதிவு,பிரயாணப்படி மற்றும் சம்பளம் தயாரித்தல் போன்ற தாபன நடவடிக்கைகள் மேலதிகப்பணிப்பாளர் நாயகமான மாவட்டச்செயலாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளருக்கு பொறுப்பளிக்கப்படுவதுடன் கணக்காய்வு கடமைகளுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் இடம்பெறும். இதற்கு முன் மாவட்ட கணக்காய்வு பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் ஆலோசனைகள் தொடர்ந்து அதேநிலையில் அமுலில் இருப்பதுடன் உத்தியோகத்தர்களை நிலையங்களுக்கு நியமித்தல்,கடமைகள் ஒப்படைத்தல் மற்றும் கணக்காய்வு கடமைகள் தொடர்பாக தெளிவான ஆலோசனைகள் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் வழங்கப்படும்.

06. கணக்காய்வு அலகுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பல்வேறு விடய பகுதிகளுக்கான பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகள் பொதுவான தாபன நடைமுறைகளுக்கமைய சமுர்த்தி வங்கிச்சங்க முகாமையாளர் மற்றும் பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கான தெளிவான ஆலோசனைகள் எதிர்காலத்தில் வழங்கப்படும்.

07. இது தொடர்பாக புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்படும் பயிற்சி வேலைத்திட்டங்களில் மேலும் விளக்கம் வழங்கப்படும்.

R.P.B.திலகசிரி

பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:

01. செயலாளர்,சமுர்த்தி,வதிவிடப் பொருளாதார,நுண்நிதிய,சுயதொழில்,வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்புப் பயன்பாட்டு அரச வளங்கள் இராஜாங்க அமைச்சு - த.அ.பொ
02. பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் - த.அ.பொ
03. கணக்காய்வாளர் நாயகம் - த.அ.பொ
04. அனைத்து பகுதித்தலைவர்கள் - த.அ.பொ/உ.ந.பொ

Translated By: Mr.I.A.Gaffoor

| | | | |
|---|---|---|---|
| 99. | | [illegible] | [illegible] |
| 100. | யாழ்ப்பாணம் | யாழ்.மா.செயலகம் | யாழ்ப்பாணம்,நல்லூர்,சாவகச்சேரி |
| 101. | | வேலணை | வேலணை,ஊர்காவற்றுறை,நெடுந்தீவு |
| 102. | | பருத்தித்துறை | பருத்தித்துறை , கரவெட்டி, மருதங்கேணி |
| 103. | | கோப்பாய் | தெல்லிப்பளை, உடுவில் , கோப்பாய். |
| 104. | | சங்கானை | காரைநகர் , சங்கானை , சண்டிலிப்பாய் |

| | | | |
|---|---|---|---|
| 105. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு மா.செயலகம் | ஏறாவூர் , மண்முனை வடக்கு , வவுணதீவு |
| 106. | | வாழைச்சேனை | வாழைச்சேனை, வாகரை, ஓட்டமாவடி மத்தி , ஓட்டமாவடி மேற்கு , கிரான் |
| 107. | | களுவாஞ்சிக்குடி | களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை. வெல்லாவெளி |
| 108. | | ஆரையம்பதி | ஆரையம்பதி, செங்கலடி. காத்தான்குடி |
| 109. | அம்பாறை | அம்பாறை மா.செயலகம் | அம்பாறை , தமன. லாகுகல , |
| 110. | | அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று , அட்டாளைச்சேனை, நிந்தவூர் |
| 111. | | கல்முனை | கல்முனை தமிழ் , கல்முனை முஸ்லிம் , காரைதீவு , சாய்ந்தமருது |
| 112. | | சம்மாந்துறை | சம்மாந்துறை, இறக்காமம், நாவிதன்வெளி |
| 113. | | உகன | மகாஓய , தெஹியத்தகண்டிய, பதியத்தலாவ , உகன |
| 114. | | திருக்கோவில் | ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் |
| 115. | திருகோணமலை | திருகோணமலை மா.செயலகம். | பட்டினமும் சூழலும், மொரவெவ,கோமரங்கடவெல |
| 116. | | கந்தளாய் | கந்தளாய்,சேருநுவர,தம்பலகாமம் |
| 117. | | நிலாவெளி | குச்சவெளி, பதவிஸ்ரீபுர. |
| 118. | | கிண்ணியா | கிண்ணியா,மூதூர்,வெருகல் |
| 119. | வவுனியா | வவுனியா மா.செயலகம் | வவுனியா,நெடுங்கேணி |
| 120. | | செட்டிக்குளம் | செட்டிக்குளம் |
| 121. | | வவுனியா தெற்கு | வவுனியா தெற்கு |
| 122. | மன்னார் | மன்னார் மா.செயலகம் | மன்னார் |
| 123. | | மாந்தை மேற்கு | மாந்தை மேற்கு,மடு |
| 124. | | நானாட்டான் | நானாட்டான், முசலி. |
| 125. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு மா.செயலகம் | கரைதுறைப்பற்று |
| 126. | | மாங்குளம் | துணுக்காய் , ஒட்டுசுட்டான் , மாந்தை கிழக்கு |
| 127. | | புதுக்குடியிருப்பு | புதுக்குடியிருப்பு |
| 128. | | வெலிஓயா | வெலிஓயா |
| 129. | கிளிநொச்சி | கிளிநொச்சி மா.செயலகம் | கண்டாவளை , கரைச்சி, |
| 130. | | பூநகரி | பூநகரி |
| 131. | | பளை | பச்சிலைப்பள்ளி |